SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

# AA2 பரீட்சை - ஜனவரி 2018

**(January 2018 Examination - AA2 Level)**

வினாக்களும் விதந்துரைக்கப்பட்ட விடைகளும்

பாட இலக்கம் **: AA26**

# வியாபார முகாமைத்துவமும் தந்திரோபாயமும் (BMS)


இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669



**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு வெளியீடு**

இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

# AA2 பரீட்சை – ஜனவரி 2018

# (AA26) வியாபார முகாமைத்துவமும் தந்திரோபாயமும்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**குறு நோக்குவினாக்கானவிடைகள் (OTQs)**

**பத்து (10) கட்டாய வினாக்கள்**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்**

| வினா இலக்கம் | விடை |
|---|---|
| 1.1 | (3) |
| 1.2 | (4) |
| 1.3 | (2) |
| 1.4 | (3) |
| 1.5 | (4) |
| 1.6 | உண்மை |
| 1.7 | பொய் |
| 1.8 | உண்மை |
| 1.9 | உண்மை |
| 1.10 | உண்மை |

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**பிரிவு *A* இன் நிறைவு**

## பகுதி - B

**05 கட்டாய வினாக்கள்**
**(மொத்தம் 25 புள்ளிகள்)**

## வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**ஒரு ஒழுங்கமைப்பிற்கு முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் / அவசியம்:**

- நிறுவன இலக்குகளை பயனுறுதி வினைத்திறன் மிக்க முறையில் நிறுவன இலக்குகளை அடைவதற்கான நிறுவன வளங்களான மனித, பௌதீக, நிதி போன்ற வளங்களை பயன்படுத்த உதவுகிறது. இதனூடாக வளங்களை உச்சமாக பயன்படுத்த உதவுகிறது.
- பயனுறுதி மற்றும் வினைத்திறன் என்பன குறைந்த விரயத்தையே ஏற்படுத்தும். இது இலாபத்தை உயர்த்த உதவும்.
- இது பயனுறுதி வாய்ந்த நிறுவன கட்டமைப்பை தெளிவான அதிகாரம் மற்றும் பொறுப்பை காட்டும் வகையில் காட்டுகின்றது.
- இது ஒட்டுமொத்தமாக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதோடு, நாட்டின் உற்பத்தியை அதிகரித்து மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துகிறது.
- இது கிரயத்தை குறைக்க உதவுகிறது. அதாவது குறைந்த வளங்களைக்கொண்டு கூடிய வெளியீடுகளை பெறுவதற்கு இது உதவுகிறது.
- இது மாற்றங்களுக்கு சிறப்பாக முகங்கொடுக்க உதவுகிறது. இதன்மூலம் மாறும் உலகோடு தொடர்புபட இது உதவுகிறது.
- இது நிறுவனத்தின் புத்தாக்கங்களை ஊக்குவிக்கிறது. இதன்மூலம் நிறுவனத்தில் புதிய எண்ணங்கள், புதிய தொழில்நுட்பங்கள், புதிய உற்பத்திகள் போன்றவை கிடைப்பதன் மூலம் நிறுவனம் போட்டிகளை சிறப்பாக எதிர் கொள்ள முடியும்.
- இது நிறுவனத்தின் பிம்பத்தை உயர்த்துவதோடு நிறுவனம் தரமான உற்பத்திகளை வழங்க முடியும் என்பதால் நன்மதிப்பு அதிகரிக்கும்.
- இது ஊழியர்களுக்கு நிதிசார், நிதிசாரா வகையில் ஊக்குவிப்புகளை வழங்குவதன்மூலம் ஊழியர்களின் தொழில் மீதான ஆர்வத்தை அதிகரிப்பதோடு நிறுவனத்தின் உற்பத்தி திறனை அதிகரிக்கும்.

முடிவில் ஒரு நிறுவனத்தின் வெற்றி தோல்வி முகாமைத்துவத்திலேயே தங்கியுள்ளது.

**(05 புள்ளிகள்)**

## வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

ஒழுங்கமைப்பு சார் / அலுவலகம் சார் நிலையின் பண்புகள்:

i. சிறப்புத்தேர்ச்சி
ii. கட்டளை சங்கிலி
iii. விதிகளும், ஒழுங்குகளும்
iv. பக்கச்சார்பின்மை / தெளிவான முறைமையும் நடபடிமுறையும்.
v. நியமிக்கப்பட்ட ஊழியர்கள்
vi. துறைசார்ந்த வல்லுனர்கள்
vii. தனியார் / பொது துறை
viii. முழு நேர அலுவலகர்கள்
ix. உத்தியோகபூர்வ தொடர்பாடல்
x. தொழில்நுட்ப இயலுமை.

**(05 புள்ளிகள்)**

## வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

1. **தனிநபர் சார்ந்த திறன்கள் / நபர்களுக்கிடையிலான திறன்**

இத்திறனானது ஒருவர் அல்லது பலருடன் முகத்துக்கு முகம் தொடர்பாடல் செய்ய உதவுகிறது. வார்த்தைகளை உபயோகிப்பது மட்டுமே ஐஸ்பேக் தொழில்நுட்பம் வலியுறுத்துகிறது. சிறந்த நபர்களுக்கிடையிலான தொடர்பானது குழுக்களாக அணிகளாக வினைத்திறனாக பணிபுரிவதற்கு உதவுகின்றது. இது முறைசார்ந்த முறைசாராத வகையில் அமையலாம். இது நபர்களுக்கிடையிலான சிறந்த தொடர்பை ஏற்படுத்துவதோடு மற்றவர்களுக்கிடையிலான அக்கறையினையும் புரிதலையும் அதிகரிக்கிறது.

2. **செவிமடுக்கும் திறன்**

நபர்களுக்கிடையிலான திறனில் முக்கியமான திறன் இதுவாகும். தொடர்பாடலில் ஈடுபடும்போது 45மூ செவிமடுத்தலுக்காகவே செலவிடப்படுகிறது. உறுதிப்படுத்திக்கொள்ளல் உணர்வை வெளிப்படுத்தல் என்பன முகாமையாளர்களால் பயன்படுத்தப்படும் நுட்பங்களாகும்.

3. **வெளிப்படுத்துகை திறன் / ஆற்றுகை திறன்**

ஒரு குறிப்பிட்ட குழுவிற்கு ஒட்டுமொத்தமாக ஒரு விடயத்தை எடுத்துரைக்கும் திறன் முகாமையாளர்களுக்கு மிக முக்கியமான ஒன்றாகும். நன்கு கற்றறிந்த தரப்பினர் கூட வெளிப்படுத்தலில் பயத்தை எதிர்நோக்குவர். ஆனால் முறையான பயிற்சியினூடாக முகாமையாளர்கள் தங்களது திறன்களை சிறப்பாக வெளிப்படுத்தலாம். ஒரு பயனுறுதிவாய்ந்த வெளிப்படுத்துகைக்கு முக பாவனை, உடல் பாவனை சமிக்ஞைகள் சைகைகள் என்பன மிக அவசியம்.

4. **எழுத்தாற்றல் / எழுதும் திறன்**

தொடர்பாடலில் திறனில் வெறுமனே வாய்மொழி மூலம் நபர்களுடன் தொடர்பாடல் மட்டும் உள்ளடங்காது. ஒரு முகாமையாளருக்கு ஒரு விடயத்தை தெளிவாகவும் வினைத்திறனாகவும் எழுதும் திறன் தொடர்பாடலுக்கு மிக அவசியம். மோசமான எழுத்து மூல தொடர்பாடல் வாசகர்களை வெறுப்படைய செய்வதோடு எழுதுபவர்களையும் மதிப்பற்றதாக்கும் ஆகவே முறையான வார்த்தைகளை பிரயோகித்து சரியான முறையில் ஒரு விடயத்தை எடுத்துரைக்க தெரிய வேண்டும்.

5. **தனிப்பட்ட திறன்கள்**

இத்திறனானது சிறந்த உடல் தகுதியையும் மன வலிமையையும் பேணுவதற்கானதாகும்.

தனிப்பட்ட திறனை வளர்ப்பதுடன் ஊடாக தொடர்பாடல் திறனையும் வளர்த்துக்கொள்ள முடியும். தன்னைப்பற்றிய எண்ணத்தை விருத்தி செய்துகொள்வதனூடாக தன்னம்பிக்கையையும் தொடர்பாடல் திறனையும் வளர்த்துக்கொள்ள முடியும்.

ஒருவருடைய தோற்றமும் நடந்துகொள்ளும் விதமும் மற்றவர்களில் அக்கறை செலுத்தும் விதமும் தொடர்பாடலுக்கு மிக அவசியம்.

**(05 புள்ளிகள்)**

aat SRI LANKA

## வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**தந்திரோபாய கட்டுப்பாட்டிற்கும் தொழிற்பாட்டு / செயற்பாட்டு கட்டுப்பாட்டிற்கும் இடையிலான வேறுபாடுகள்.**

| தந்திரோபாய கட்டுப்பாடு | செயற்பாட்டு கட்டுப்பாடு |
|---|---|
| பல்வேறு மூலங்களில் இருந்து தகவல்கள் தேவைப்படும் | சில மூலங்களில் இருந்து தகவல்கள் தேவைப்படும் |
| எதிர்காலம் பற்றி கருத்திற்கொள்ளும் | நடைமுறை தொடர்பில் / நிகழ்காலம் தொடர்பில் கருத்திற்கொள்ளும். |
| எதிர்வுகூறப்பட்ட பல்வேறு நிகழ்வுகளை வெற்றிகரமாக முகம்கொடுக்கக்கூடிய மாற்றுவழிகளை வழங்கும். | ஏதேனும் விலகல்கள் இருப்பின் அதனை சீராக்குவதற்கு இது முக்கியத்துவம் வழங்கும். |
| தீர்மானங்களின் நேர்த்தியினை ஆய்வு செய்யும் | அளவுசார்ந்த வெளிப்பாடுகளை / வெளியீடுகளை ஆய்வு செய்யும். |
| குறைந்த வகையில் ஒவ்வொரு விடயங்களையும் உற்றுநோக்கும். | தனிப்பட்ட ஒவ்வொரு குறுகிய விடயங்களையும் தனிப்பட்ட வகையில் கருத்திற்கொள்ளும். |
| அறிக்கையிடும் காலம் வேறுபடும் | இது குறிப்பான ஒரு காலப்பகுதியில் அறிக்கையிடலை மேற்கொள்ளும். |

**(05 புள்ளிகள்)**

## வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

பின்வரும் காரணங்களுக்காக தலைமைத்துவம் அவசியமாகின்றது.

i. சிறந்த வழிகாட்டலை வழங்க தலைமைத்துவம் அவசியம்

ii. ஊழியர்களை ஊக்குவிப்பதற்கு தலைமைத்துவம் அவசியம்

iii. ஊழியர்கள் மத்தியில் தன்னம்பிக்கையை அதிகரிப்பதற்கு தலைமைத்துவம் அவசியம்

iv. இலக்கை அடைவதை உறுதிசெய்ய தலைமைத்துவம் அவசியம்

v. ஊழியர்களின் உளவியல் திறனை உயர்த்துவதற்கு தலைமைத்துவம் அவசியம.

vi. சிறந்த முறைமையான ஒருங்கிணைப்பை ஏற்படுத்த தலைமைத்துவம் அவசியம்

vii. மாற்றத்தை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு தலைமைத்துவம் அவசியம்

**(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**பிரிவு *B* இன் நிறைவு**

**பகுதி - C**

03 கட்டாய வினாக்கள்
(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**(a) தர்க்க ரீதியான தீர்மானமெடுத்தலுக்கான தடைகள்**

i. பற்றாக்குறையான தரவுகளும், தகவல்களும் இருத்தல்
ii. அடிக்கடி மாறும், நிச்சயமற்ற சூழல்
iii. தீர்மானமெடுப்பவரின் வரையாறான ஆற்றல்
iv. தனிப்பட்ட பக்கசார்பு
v. கூடுதலான முறையில் கோட்பாடு சார்ந்திருத்தல்
vi. ஒரு பக்கம் சார்ந்த தர்க்க சிந்தனை
vii. திருப்திபடுத்த முயற்சித்தல்
viii. உயர்ந்த நிலை கோட்பாடு
ix. Heuristic இன் கோட்பாடு

**(04 புள்ளிகள்)**

**(b) தர்க்க ரீதியான தீர்மானமெடுத்தல் படிமுறை:**

**படிமுறை 1.** **பிரச்சனையை இனங்கானலும் பகுப்பாய்வு செய்தலும்**
பிரச்சனை என்பது எதிர்பார்த்த விடயத்திற்கும், உண்மையான பெறுபேற்றுக்குமிடையிலான விரும்பத்தகாத இடைவெளி ஆகும்.
அறிகுறிகளைக்கொண்டு பிரச்சனைகளை இனங்கானல் வேண்டும். அறிகுறிகளே பிரச்சினைகளுக்கான காரணங்களாகும். பின்பு பிரச்சனையோடு தொடர்புடைய பிரச்சனைகள் அதன் விளைவுகளை கண்டறிய முடியும்.

**படிமுறை 2.** **மாற்று வழிமுறைகளை இனங்கானல்**
ஒரு பிரச்சனையை தீர்க்க பல்வேறு மாற்றுத்தீர்வுகள் காணப்படும். ஆகவே ஒரு பிரச்சனை தீர்ப்பதற்கான பல்வேறு மாற்று வழிமுறைகளை இனங்கானல் வேண்டும்.

**படிமுறை 3.** மாற்று வழிமுறைகளை பகுப்பாய்வு மற்றும் மதிப்பீடு செய்தல். ஒவ்வொரு மாற்று வழிமுறைகளையும் ஒப்பீடு செய்தல்

**படிமுறை 4.** சிறந்த வழிமுறையினை தெரிவு செய்தல். ஆய்வுக்குப்பிறகு மிக பிரயோக ரீதியிலான வழிமுறையினை நடைமுறைபடுத்தல்

**படிமுறை 5.** சிறந்த வழிமுறையை நடைமுறைப்படுத்தல் அடுத்த படிமுறை சிறந்த வழிமுறையை தாமதமின்றி நடைமுறைப்படுத்தல்

படிமுறை 6. நடைமுறைப்படுத்திய தீர்மானத்தில் வெற்றியை பரிசீலித்தல், நடைமுறைப்படுத்திய தீர்மானம் வெற்றியடைந்துள்ளதா? என்பதை ஆய்வு செய்தல்.

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 08 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**(a) ஊழியர் ஒருவரின் செயலாற்றத்திற்கும் ஊக்குவித்தலுக்கும் இடையிலான தொடர்பு:**

**செயவாற்றம் = (இயலுமை x வேலைச்சூழல் x ஊக்குவித்தல்)**
*(Performance)*

ஊழியர் ஊக்குவித்தலென்பது ஊழியர் செயற்திறனில் பாரிய அளவில் தாக்கம் செலுத்துகின்றது. ஊக்குவித்தலின்றி இயலுமை மற்றும் சிறந்த கட்டமைக்கப்பட்ட வேலைச்சூழல் பயனற்றதாகும். ஊக்குவிப்பின்றி ஊழியர்கள் தமது முழுமையான ஆளுமையை வெளிப்படுத்த மாட்டார்கள். மேற்கூறிய சமன்பாட்டின் படி ஊக்குவித்தல் பூச்சியமாயின் ஊழியர் செயலாற்றமும் பூச்சியமாகும். ஆகவே ஊக்குவித்தலின்றி ஊழியர் செயலாற்றவில்லை என்பதே உண்மையாகும், ஆகவே ஊழியர் ஊக்குவித்தலுக்கும், செயலாற்றத்தலுக்கும் இடையில் நேர்க்கணிய தொடர்பு உண்டு.

**(04 புள்ளிகள்)**

(b) **ஆப்ரகாம் மார்ஸ்லோவின் தேவைக்கூம்பகம்:**

உடலியல் தேவைகள் :- உடலியல் தேவைகள் என்பது மனிதன் உயிர்வாழ்வதற்கு கட்டாயம் பூர்த்தி செய்ய வேணடடியவை ஆகும். இத்தேவைகள் பூர்த்தி செய்யப்படாவிடின் மனித உடல் சீராக இயங்காது இதனால் இத்தேவைகள் வேண்டும் (உணவு, உடை, உறையுள்)

பாதுகாப்பு தேவைகள் :- ஒருவரின் உடலியல் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் அடுத்ததாக அவரது பழக்கவழக்கத்தில் பாதுகாப்பு தேவைக்கான முக்கிய இடம் வழங்கப்படும் பாதுகாப்பு தேவையானது தனிப்பட்ட பாதுகாப்பு, நிதிபாதுகாப்பு சுகாதாரம், விபத்து, நோய்களிலிருந்து விடுபடல் என்பவற்றை உள்ளடக்கும்.

சமூக தேவைகள் :- உடலியல் பாதுகாப்பு தேவைகள் நிறைவேற்றப்பட்டவுடன் மூன்றாவதாக உருவாகும் தேவை சமூக தேவையாகும். இது நபர்களுக்கிடையிலான தொடர்புகள் மற்றும் உணர்வுகள் தொடர்பானது ஆகும்.

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 09 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**(a) வணிக நிறுவனங்களின் கூட்டிணைக்கப்பட்ட சமூகப்பெறுப்பு மட்டங்கள்:**

பொருளாதாரம்சார் சமூகப்பொறுப்பு :- கூட்டிணைக்கப்பட்ட சமூக பொறுப்பு (CSR) தொடரபான முதலாவது நிலை இதுவாகும். இதன்படி ஒரு நிறுவனம் வாடிக்கையாளர் தேவைக்கேற்றவாறு உற்பத்திகளை மேற்கொள்வதோடு நியாயமான விலையில் பொருட்களை வழங்குதல் வேண்டும்.

சட்டம்சார் சமூக பொறுப்பு :- இது ஒரு சட்டரீதியான நபர் ஒருவரின் பொறுப்புகள் ஆகும், அதாவது ஒரு நிறுவனம் நிறைவேற்ற வேண்டிய பல்வேறு சட்டத்தேவைப்பாடுகள் காணப்படுகின்றன. ஊழியரின் உரிமைகளை பாதுகாத்தல், நுகர்வோர் உரிமைகளை பாதுகாத்தல். ஊழியர் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை ஏற்படுத்தல் என்பன இதற்கான உதாரணங்களாகும்.

விழுமியம்சார் சமூக பொறுப்பு :- இது சமூகப் பொறுப்பு மூன்றாவது நிலையாகும் இது நியாயத்துவம், நீதியோடு பொடர்புடையது ஆகும். நிறுவனங்கள் நியாயம் நேர்மையோடு சந்தையில் இயங்குதல் வேண்டும்.

சுய உணர்வுசார் பொறுப்பு :- நிறுவனங்கள் வெறுமனே பொருளாதார அலகுகள் அல்ல இவை சமூக அலகுகளும் ஆகும். இச் சமூகப்பொறுப்பானது நிறுவனங்கள் விரும்பி, தானாக முன்வந்து சமூகம் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்துகின்றது. நற்காரியங்களுக்கு நிதியுதவியளித்தல், தொழிநுட்ப உதவிகளை இலவசமாக வழங்கல், இயற்கை அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டோருக்கு உதவுதல் என்பவற்றை குறிப்பிடலாம்.

**(06 புள்ளிகள்)**

**(b)**

ஒரு நிறுவனத்திற்கு நிறுவன கலாசாரத்தின் முக்கியத்துவம் / அவசியம்

i. நிறுவனத்தின் ஒரே சீரானத்தன்மையை பேண நிறுவனக்கலாசாரம் உதவும்.

ii. நிறுவன ஊழியரை ஊக்குவிக்க நிறுவனக்கலாசாரம் உதவும்

iii. நிறுவனம்சார் கலாசாரம் நம்பிக்கையை அதிகரிக்கும்

iv. போட்டியை சிறப்பாக எதிர்கொள்ள நிறுவன கலாசாரம் உதவும்

v. நிறுவனம்சார் கலாசாரம் நிறுவனத்தை தனித்துவப்படுத்தி காட்ட உதவும்

vi. நிறுவனத்தை சரியாக வழிநடத்த நிறுவனம்சார் கலாசாரம் உதவும்

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

aat SRI LANKA

**பிரிவு *C* இன் நிறைவு**

**பகுதி - D**

**கட்டாய வினா**
**(மொத்தம் 25 புள்ளிகள்)**

## வினா 10 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) **சுபுல் தளபாட கம்பனியில் எதிர்நோக்கப்படும் சவால்கள்**

1. **உலகமயமாக்கம்**

உலகமயமாக்கமானது முகாமைத்துவத்தின் அனைத்து பகுதிகளிலும் தாக்கம் செலுத்துகிறது. இவை பல்வேறு வாய்ப்புகளை இலாபம் தரக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்குகின்றது. முழு உலகமும் உலக சந்தையாக கருத்திற்கொள்ளப்படுகிறது. இக்கம்பனியானது மிகச்சிறந்த வியாபாரக்குறி பெயரை கொண்டிருந்த போதிலும் தமது உற்பத்திகளுக்கான கேள்வியில் வீழ்ச்சியை இக்கம்பனி சந்திக்கிறது. உலகளாவிய உற்பத்திகள் அதாவது இறக்குமதி தளபாடங்களுடனான கடுமையான போட்டியின் காரணமாக உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு பாரிய சவால்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகிறது.

2. **ஒழுக்கநெறிகள் விழுமியங்கள், சமூகப்பொறுப்புகள் மற்றும் நிறுவன ஆளுகை கோட்பாடோடு அது கொண்டுள்ள தொடர்பு.**

ஒரு நிறுவன முகாமையாளர் தன்னுடைய தனிப்பட்ட நலன்களுக்காக செயற்படாது நிறுவனம்சார் மற்றும் அக்கறையுடைய தர்பபினரின் நலம்சார்ந்து செயற்பட வேண்டியதோடு இதன்மூலம் உயர்ந்த பெறுமதியுடைய விழுமியங்களையும், நிறுவன ஆளுகையையும் பேணுவது கருத்திற்கொள்ளப்படுகிறது.

3. **தர முகாமைத்துவம்**

வாடிக்கையாளரின் தேவைகளையும் எதிர்ப்பார்ப்புகளையும் பூர்த்தி செய்வதற்கு நிறுவனங்கள் தமது செயற்பாடுகளை மிகச்சிறந்த முறையில் மேற்கொள்ள வேண்டும். இக் கம்பனியானது பிளாஸ்டிக் / இரும்பு தளபாடங்கள் போன்ற பதிலீடுகளிலிருந்து தம்மை வாடிக்கையாளர்களிடம் தனித்துவப்படுத்தி காட்ட தனது உற்பத்திகளை மிகத்தரம் வாய்ந்ததாக வழங்குதல் வேண்டும்.

4. **ஊழியப்படையின் பல்லின கலாசாரத்தையும், பல்லினத்துவத்தையும் முகாமை செய்தல்.**

வயது, பால், கலாசாரம், இனம் மற்றும் ஏனைய வேறுபாடுகளைக்கொண்ட ஊழியர்களை முகாமை செய்தல் இன்றைய முகாமையாளரின் பிரதான சவாலாகும். ஊழியப்படையின் பல்லினததன்மையை முகாமை செய்தல் ஒரு சவாலாகும்.

5. **இலத்திரனியல் வணிக உலகத்தை முகாமை செய்தல்**

இலத்திரனியல் மற்றும் இணையத்தளம் மூலமான வணிகம் உலகளாவிய ரீதியில் மிக வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது. இதற்கான காரணம் தகவல் தொழிநுட்ப வளர்ச்சி ஆகும்.

6. **முகாமைத்துவ அறிவும், நிறுவனங்களைப்பற்றி கற்றறிந்து கொள்ளலும்.**

ஒரு நிறுவனம் சந்தையில் நிலைத்திருக்க வேண்டுமாயின் ஒவ்வொரு நிறுவனம் பற்றியும் தனித்தனியாக கற்றறிந்து கொள்ளுதல் வேண்டும். இது சூழல் மாற்றங்களை கண்டறிந்து கொள்ள உதவுவதோடு அதற்கேற்றவாறு மாற்றங்களை ஏற்படுத்த உதவுகிறது.

7. **தகவல் தொழில்நுட்பம்**

தற்கால தகவல் தொழில்நுட்பத்தின் உதவியின்றி வணிகங்கள் இயங்க முடியாது. முகாமையானது இணையத்தளம் மூலமான நன்மைகளை பெற்றுக்கொள்ள வேண்டும். முகாமையாளர்கள் மற்றும் சந்தைப்படுத்துவோர் தகவல் தொழில்நுட்பத்தின் அனைத்து விடயங்களையும் அறிந்திருக்க வேண்டியதோடு அதனை நிறுவன நடவடிக்கைகளில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதையும் அறிந்திருத்தல் வேண்டும்.

8. **குறைந்த கிரயத்திலான ஊழியர்களுடன் போட்டியிடர்**

இன்றைய முகாமையாளர்கள் எதிர்நோக்கும் சவால்களில் மிகப்பிரதானமானது தமது செயற்பாடுகள் தொடர்பான கிரயத்தை குறைப்பதாகும். சந்தைகள் குறைந்த ஊழிய கிரயத்தை கொண்ட ஊழியர்களிடம் போட்டியிடல் வேண்டும்.

**(06 புள்ளிகள்)**

(b) **தொழிற்பாட்டு ஒழுங்கமைப்பு கட்டமைப்பின் நன்மும தீமை:**

| நன்மை | தீமை |
|---|---|
| இதுவே சிறப்புத்தேர்ச்சிக்கான அடிப்படையாகும். | ஓட்டுமொத்த இலக்குகளை கண்காணிக்க முடியாது. |
| மேற்பார்வை செய்தல் இலகு | நிறுவனம் பாரியதாக மாறும்போது ஒருங்கிணைத்தல் கடினம். |
| இது கிரயத்தை / மேற்பார்வை கிரயத்தை குறைக்கும் | திணைக்களங்களுக்கிடையிலான முரண்பாடுகள் |
| இது ஊழியருக்கான வினைத்திறனான பயிற்சி வழங்க உதவும். | குறுகிய பயிற்சி அதாவது குறித்த திணைக்களத்தினை மட்டும் கருத்திற்கொள்ளல் |
| முகாமை வினைத்திறனை அதிகரிக்கும் | சூழல் மாற்றங்களை கருத்திற்கொள்ளல் மிக மெதுவாக இடம்பெறும். |

**(08 புள்ளிகள்)**

(c) **SWOT பகுப்பாய்வு:**

| பலம் | பலவீனம் |
|---|---|
| • சிறந்த நற்பெயர்<br>• பலமான வியாபாரக்குறி<br>• அனுபவம் வாய்ந்த ஊழியர்<br>• உபுலின் அனுபவம் | • தரமற்ற / ஒழுங்கற்ற தீர்மானமெடுத்தல்<br>• நிலைத்திருப்பதை மட்டும் கருத்திற்கொள்ளல்<br>• ஒழுங்கற்ற நிறுவன கட்டமைப்பு<br>• அதிகார பரவலாக்க குறைபாடு (முக்கிய தொழிற்பாடுகளான மனிதவள தொழிற்பாடுகள், சந்தைப்படுத்தல், நிதி கருமங்கள் ஒரேயொரு சிரேஸ்ட முகாமையாளரால் கருத்திற் கொள்ளப்படல்) |
| **வாய்ப்புகள்** | **அச்சுறுத்தல்கள்** |
| • பல்லினத்தன்மை வாய்ப்புகள்<br>• அரசின் மானியங்களும், உதவிகளும்<br>• அரசின் ஏனைய உதவிச் சேவைகள். | • பொருளுக்கான கேள்வி குறைவடைதல்<br>• கடுமையான வெளிநாட்டு போட்டி<br>• பதிலீடுகளின் போட்டி |

மேலுள்ள காரணிகளை கருத்திற்கொள்ளும்போது முதலில் இந்த நிறுவனத்தின் வாய்ப்புகளை விட அச்சுறுத்தல்களே மிகப் பலம்வாய்ந்தவையாக காணப்படுகிறது. இதனால் இக்கம்பனி தனது பலவீனங்களை நீக்க தமது பலத்தை மேலும் விஸ்தரிக்க வேண்டும். மேலும் இந்நிறுவனம் தனது பலத்தினூடாக தமது வாய்ப்புகளை சரிவர பயன்படுத்தி அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள வேண்டும்.

**(08 புள்ளிகள்)**

(d) **போர்ட்டலின் பெறுமதி சங்கிலியின் பிரதான / அடிப்படை தொழிற்பாடுகள்**

i. உள்ளக வழங்கள் சேவை

ii. தொழிற்பாடுகள்

iii. வெளியக வழங்கள் சேவை

iv. விற்பனையும் சந்தைப்படுத்தலும்

v. சேவைகள்

**(03 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**பிரிவு *D* இன் நிறைவு**

***Notice :***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers".

The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designed especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2017 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*
*All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*